**O.S.No.47/2016**

**PW.1** பாலமுருகன்

17-06-2025 ஆம் தேதி அன்று சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

டைடல் பார்க் நிறுவனம் விடுமுறையில் இருந்தால் எந்த பொருட்களையும் உள்ளே எடுத்துச் செல்ல முடியாது என்று சொன்னால் சரியல்ல. டைடல் பார்க் நிர்வாகம் 24 மணி நேரமும் செயல்படும். 2015 ல் பொங்கல் தினத்தன்று டைடல் பார்க் அலுவலகத்திற்கு விடுமுறை என்று சொன்னால், எனக்கு அதைப் பற்றி சரியாக தெரியாது. வா.த.சா.ஆ.6 ல் சொல்லப்பட்ட வேலைகளைத் தவிர மற்ற வேலைகளையும் பிரதிவாதியிடம் ஒப்படைத்தோம் என்று சொன்னால், அதைப் பற்றி எனக்கு சரியாக நினைவில்லை. டிரைனேஜ் வேலைகளை எடுப்பது, எக்ஸ்ட்ரா கேபிள் எடுப்பது, 5 அடிக்கு கண்ணாடியாலான தடுப்புகள் செய்வது போன்ற வேலைகள் வா.த.சா.ஆ.6 ல் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல, காரணம் வா.த.சா.ஆ.6 ல் சொல்லப்பட்ட வேலைகளில் மேற்சொன்ன வேலைகள் அனைத்தும் அடங்கும். 21-01-2015 ஆம் தேதி அன்று பிரதிவாதி எனது பெயருக்கே ஒரு ஈ-மெயில் அனுப்பியிருந்தார் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு சரியாக நினைவில்லை. 21-01-2015 தேதியிட்ட ஈ-மெயிலில் பிரதிவாதி இதுநாள்வரை வரி விலக்கு சம்மந்தமான உத்திரவுகள் எதுவும் வரவில்லை என்று குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. 27-01-2015 அன்று நான் ஸ்ரீனிவாசனுக்கு ஈ-மெயில் அனுப்பியுள்ளேன் என்று சொன்னால், ஈ-மெயிலை சரிபார்க்காமல் என்னால் உறுதியாக கூற இயலாது. 27-01-

2015 அன்று நான் அனுப்பிய ஈ-மெயிலில் இதுவரை நம்மால் வரிவிலக்கு உத்திரவு பெறப்படவில்லை என்றும், அதனால் பிரதிவாதி வேலையை செய்ய முடியவில்லை என்று நான் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் ஈ-மெயிலை சரிபார்க்காமல் என்னால் குறிப்பிட்டு கூற இயலாது. 02-02-2015 ஆம் தேதி அன்று நான் பிரதிவாதிக்கு ஈ-மெயில் அனுப்பினேன் என்று சொன்னால், ஈ-மெயிலை சரிபார்க்காமல் என்னால் கூற இயலாது. இந்த ஈ-மெயிலில்தான் நாங்கள் வரிவிலக்கு வாங்கி விட்டோம் என்று பிரதிவாதிக்கு நாங்கள் தெரிவித்துள்ளோம் என்று சொன்னால் ஈ-மெயிலை சரிபார்க்காமல் என்னால் கூற இயலாது. எனது ஈ-மெயிலை பரிசோதனை செய்தால் மேற்சொன்ன அனைத்து விவரங்களும் தெரியவரும் என்று சொன்னால், பரிசோதனை செய்யலாம். 20-02-2015 ஆம் தேதி Duct Type ஏ சி பொருத்துவது சம்மந்தமாக வேறு ஒரு நிறுவனத்திற்கு நான் ஈ-மெயில் அனுப்பினேன் என்று சொன்னால், என்னுடைய ஈ-மெயிலை சரிபார்க்காமல் என்னால் கூற இயலாது. 23-02-2015 ஆம் தேதி நான் பிரதிவாதிக்கு அனுப்பிய ஈ-மெயிலில் நாளைக்குள் ஏ.சியைப் பொருத்துவது சம்மந்தமாக முடிவு எடுக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளோம் என்று சொன்னால்,அனைத்து ஈ-மெயில்களையும் பரிசோதனை செய்யாமல் என்னால் எதுவும் கூற இயலாது. 31-03-2015 ஆம் தேதி நான் பிரதிவாதிக்கு ஈ-மெயில் அனுப்பி அதில் Orjay communications நிறுவனத்திற்கு ஏ.சி பொருத்துவதற்கு ஒர்க் ஆர்டர் கொடுத்துள்ளதாகவும், அவைகளை பொருத்துவதற்கு சில உபகரணங்கள் தேவைப்படுவதாலும், அதனை ஏற்பாடு செய்து கொடுக்குமாறும் நான் கூறியுள்ளேன் என்று சொன்னால் ஈ-மெயில் மற்றும் அதன் தேதி, விவரங்களின் உண்மை தன்மையை சரிபார்க்காமல் என்னால் கூற இயலாது. 30-03-2015 ஆம் தேதி அன்று சிங்கள் லைன் டயகிராம் வரைந்து கொடுக்குமாறு

பிரதிவாதியிடம் நான் ஈ-மெயில் மூலம் கேட்டேன் என்று சொன்னால், ஈ-மெயிலை சரிபார்க்காமல் அதன் உண்மை தன்மையை என்னால் கூற இயலாது. அதனால் பிரதிவாதி அந்த டயகிராமை ஈ-மெயில் மூலம் எனக்காக வரைந்து கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. நான் கேட்டவாறு மேற்சொன்ன வரைபடத்தை பிரதிவாதி தயார் செய்து எங்கள் நிறுவனத்திற்கு அனுப்பி வைத்தார் என்று சொன்னால், ஈ-மெயிலை சரிபார்க்காமல் என்னால் கூற இயலாது. மேற்சொன்ன டயகிராம் இல்லாமல் அந்த சைட்டில் வேலை செய்ய இயலாது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி கொடுத்த டயகிராமை டைடல் நிறுவாகத்திடம் காண்பித்து ஒப்புதல் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் அனுப்பிய டயகிராமில் சில மாறுதல்கள் செய்யவேண்டுமென்று டைடல் பார்க் நிர்வாகம் 30-03-2015 லேயே ஒரு ஈ-மெயில் அனுப்பியது என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன மாறுதல்களை செய்துதருமாறு 02-04-2015 ல் ஈ-மெயில் ஒன்றை பிரதிவாதிக்கு அனுப்பினேன் என்று சொன்னால் பார்த்தால்தான் கூற இயலும். 04-04-2015 அன்றும் வரைபடத்தை சீக்கிரம் தயார் செய்து கொடுக்குமாறு நான் ஈ-மெயில் அனுப்பினேன் என்று சொன்னால் சரியல்ல. 31-03-2015 ஆம் தேதி Orjay Communication நிறுவனத்திற்கு நான் ஈ-மெயில் அனுப்பி பிரதிவாதி எஸ்.எல்.டி டயகிராம் வரைவதற்கு சில தேவைகளை பூர்த்தி செய்யுமாறு கோரியிருந்தேன் என்று சொன்னால் ஈ-மெயிலைப் பார்த்தால்தான் கூற இயலும். என்ன விதமான கலரில் பெயிண்ட்டிங் வேலை செய்யவேண்டும் என்று நாங்கள் முடிவு செய்தோம் என்றால் சந்தன கலரில் செய்யுமாறு கூறினேன். அதை எப்பொழுது பிரதிவாதியிடம் நான் கூறினேன் என்று ஆவணத்தை பார்த்தால்தான் கூற இயலும். பிரதிவாதி 2 அல்லது 3 மாதிரி பெயிண்ட்டிங் வண்ணங்களை அடித்து பார்த்து அது

சம்மந்தமாக எனக்கு ஈ-மெயில் அனுப்பப்பட்டது என்று சொன்னால், ஈ-மெயிலைப் பார்த்தால்தான் என்னால் கூற இயலும். 14-04-2015 வரை என்ன வண்ணம் என்று நாங்கள் முடிவு செய்யாத காரணத்தினால் அன்றைய தினமே வண்ணத்தை முடிவு செய்து தெரிவிக்குமாறு எனக்கு பிரதிவாதி ஈ-மெயில் அனுப்பினார் என்று சொன்னால், ஈ-மெயிலை சரிபார்க்காமல் என்னால் உறுதியாக கூற இயலாது. 15-04-2015 ஆம் தேதி அன்று வா.த.சா.ஆ.6 ல் இல்லாத புது வேலையான 5 அடிக்கு தடுப்புகள் செய்து கொடுக்கச் சொல்லி கேட்டதன்பேரில் பிரதிவாதிகள் அந்த வேலையை செய்த பின்பு அது குறித்த ஆய்வு அறிக்கையை புகைபடங்களுடன் என்னுடைய உயர் அதிகாரிகளுக்கு நான் ஈ-மெயில் அனுப்பி வைத்தேன் என்று சொன்னால் ஈ-மெயிலில் அதன் விவரங்களை சரிபார்க்காமல் என்னால் கூற இயலாது. ஆனால் பிளாஸ்டர் ஆப் பாரிஸ் தடுப்புகள் செய்து எங்களுடைய ஒப்புதலுக்காக வைத்திருந்தார். அதை நான் புகைப்படம் எடுத்து என்னுடைய உயர் அதிகாரிக்கு அனுப்பி வைத்தேன். ஆனால் ஒப்புதல் கொடுத்தார்களா என்று எனக்கு தெரியாது. ஈ-மெயிலைப் பார்த்தால்தான் கூற இயலும். bala@indmax.com என்ற முகவரி அந்த சமயத்தில் நான் பயன்படுத்தியதுதான். ஆனால் அதை தற்பொழுது நான் பயன்படுத்துவதில்லை. பிரதிவாதி மற்றும் என் உயர் அதிகாரிகள் அனுப்பிய கடித போக்குவரத்துக்கள் மேலே குறிப்பிட்ட ஈ-மெயிலில் இருக்கும் என்று சொன்னால், பார்த்தால்தான் கூற முடியும். ஒவ்வொரு பணிகளிலும் ஒப்புதல் பெறுவதற்கு எங்களால்தான் காலதாமதம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 19-04-2015 அன்று வா.த.சா.ஆ.6 ல் இல்லாத வேலைகளை செய்ததற்கு பணம் கேட்டு எங்களுக்கு ஒரு ஈ-மெயில் அனுப்பினார் என்று சொன்னால் அதையும் பரிசோதனை செய்யவேண்டும். அந்த ஈ-மெயிலுக்கு பின்னர்தான் 20-04-2015 அன்று

எந்தவித முன்னறிவிப்புமின்றி நானாகவே பிரதிவாதியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை ரத்து செய்து விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. ரத்து செய்வதற்கு முன்பு பிரதிவாதிக்கு நான் அறிவிப்பு எதுவும் கொடுத்தேனா என்று ஆவணங்களைப் பார்த்தால்தான் கூற முடியும். நாங்கள் முன்னறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.த.சா.ஆ.6 ல் நாங்களாக ஒப்பந்தத்தை ரத்து செய்ய அதிகாரம் கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் ஒப்பந்தத்தை ரத்து செய்தது சட்ட விரோதமானது என்று சொன்னால் சரியல்ல. ஒப்பந்தத்தை நாங்கள் 20-04-2015 லேயே ரத்து செய்து விட்டதால் அதற்கு பின்னிட்டு பிரதிவாதி எங்கள் நிறுவனத்திற்கு வர முடியாது என்று சொன்னால் சரிதான். அவர் வேலை செய்தவரை அவர் பயன்படுத்திய பொருட்கள் அனைத்தும், அவர் வேலைக்காக வாங்கி வைத்த பொருட்கள் அனைத்தும் எங்கள் சைட்டிலேயேதான் இருந்தது என்று சொன்னால் சரியல்ல. பல லட்சம் மதிப்புள்ள விலை மதிப்பான பொருட்கள் அனைத்தும் வேலை செய்த சைட்டிலேயே இருந்தது என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் ஒப்பந்தத்தை ரத்து செய்த பின்பு பிரதிவாதி எங்களுக்கு எதிராக அ.வ.எண்.1014/2015 தாக்கல் செய்திருந்தார் என்று சொன்னால் சரிதான். அந்த வழக்கு மூன்றாவது மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் இருந்தது என்று சொன்னால் சரிதான். அந்த வழக்கிலும் நாங்கள் வழக்கறிஞர் வைத்திருந்தோம். அந்த வழக்கில் நாங்கள் எதிருரை தாக்கல் செய்திருந்தோம் என்று சொன்னால் சரிதான். அந்த வழக்கின் வாதி அதாவது இந்த வழக்கின் பிரதிவாதி அவரது அனுமதி இல்லாமல் சைட்டில் வேலை செய்ய கூடாது என்று நிரந்தர உறுத்துக் கட்டளை கேட்டிருந்தார் என்று சொன்னால் சரிதான். வா.த.சா.ஆ.2 ல் தேதியோ, இடமோ குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

வா.த.சா.ஆ.2 ஆவணம் வழக்கிற்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. வா.த.சா.ஆ.5 ஆவணமும் வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. வா.த.சா.ஆ.5 ல் வேலை ஆரம்பிக்கப்பட்ட நாள் 08-12-2024 என்று கண்டுள்ளது என்று சொன்னால், சரிதான். வா.த.சா.ஆ.5 ஆவணம் வழக்கிற்காக ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எங்கள் நிறுவனத்தில் இதுவரை பிரதிவாதி ரூ.25,25,872/- செலவு செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. ஆகையால் நாங்கள்தான் பிரதிவாதிக்கு தொகையை வட்டியுடன் திருப்பிதர கடமைப்பட்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. காலதாமதத்திற்கு நாங்கள்தான் பொறுப்பாளி என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி குறிப்பிட்ட காலத்திற்குள் எங்கள் நிறுவனத்திற்கு வேலையை செய்து கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. ஆகையால் நாங்கள் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றும், பிரதிவாதி counter claim ல் கேட்டுள்ளவாறு அவருக்கு தொகை செலுத்தப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u> இல்லை

ஒம்/ பாலமுருகன்,

Taken down by me/ typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/G.Vijaya,
Principal District Judge,
Coimbatore.